# அரசுப்பணியாளர்களை நெறிப்படுத்தும் விதிகள்

1. இந்திய அரசிலமைப்புச் சட்டம் (Constitution of India)
2. அடிப்படை விதிகள், 1922 (Fundamental Rule, 1922)
3. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்
   (Tamil Nadu Government Office Manual)
4. தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016.
   (Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016)
5. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு முறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1955.
   (Tamil Nadu Civil Services ( Discipline & Appeal) Rule, 1955
6. தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் நடத்தை விதிகள் 1973.
   (Tamil Nadu Government Servants Conduct Rules, 1973)
7. தமிழ்நாடு விடுப்பு விதிகள் 1933.
   (Tamil Nadu Leave Rules, 1933)
8. தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள், 2017.
   (Tamil Nadu Revised Pay Rules, 2017)
9. தமிழ்நாடு அடிப்படைப் பணி விதிகள். (Tamil Nadu Basic Service Rules)
10. தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள். (Tamil Nadu Ministerial Service Rules)
11. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணித் தொகுதி விதிகள் 1955.
    (Tamil Nadu State and Subordinate Service Rules, 1955)
12. தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978(Tamil Nadu Pension Rules, 1978)

# தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016

# TAMILNADU GOVERNMENT SERVANTS (conditions of Service )Act 2016

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணித் தொகுதி விதிகள் 1955 (01-01-1955)

# தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016

## தமிழ்நாடு சட்டம் எண் : 14/2016

(15-09-2016)

# TAMILNADU GOVERNMENT SERVANTS (Conditions of Service ) Act 2016

## Tamil Nadu Act No.14/2016

❖ இச்சட்டம் 14.09.2016ல் மாண்புமிகு கவர்னர் அவர்களால் ஒப்புதல் செய்யப்பட்டு 15.09.2016 அன்று அரசிதழில் பிரசுரிக்கப்பட்டது.

❖ இச்சட்டத்தின் பிரிவு 40(1) (பணிமூப்பு நிர்ணயம்) 01.01.1955ல் நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படும். இச்சட்டத்தின் இதரப் பிரிவுகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

❖ இச்சட்டம் அனைத்து மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள தற்காலிக மற்றும் நிரந்தரப் பதவிகளில் பணிபுரிந்து வருபவர்களுக்கும் பொருந்தும்.

## பிரிவு 3 – விளக்கங்கள் (Definition)

(a) மாறுதல் மூலம் நியமனம் (appointed by transfer)(one category to another/same LP)

(b) ஒரு பணியில் நியமனம் (appointed to a service)

(c) அங்கீகரிக்கப்பட்ட நபர் (approved candidate)

(d) தகுதிகாண் பருவம் முடித்தோர் (approved probationer)

(e) அருந்ததியர் (Arunthathiyars)

(f) பிற்படுத்தப்பட்ட பிரிவினர் (Backward Classes) Schedule-I of Part-A,B,C &D

(g) தேர்வாணையம் (Commission) -TNPSC

## பிரிவு 3 – விளக்கங்கள்-தொடர்ச்சி ....

**h.** மேல்முறையீட்டிற்கான குழு (Committee on appeals) (Sec. 67)

**i.** தகுதிகாண் பருவத்தினர் வெளியேற்றம் (discharge of probationer)

**j.** முன்னாள் இராணுவத்தினர் (Ex-servicemen)

**k.** முழுநேர உறுப்பினர் (Full Member)

**l.** அரசு (Government)

**m.** தொகுதி உறுப்பினர் (Member of a Service)

**n.** இராணுவப் பணி (Military Service)

## பிரிவு 3 – விளக்கங்கள்-தொடர்ச்சி ....

**(o)** பணியில் இருத்தல் (On duty)

**(p)** தகுதிகாண் பருவத்தில் உள்ளோர்(Probationer in service )

**(q)** பதவி உயர்வு (Promotion)(Lower grade to higher grade in same service)

**(r)** பணித் தொகுதிக்கு நேரடியாக தேர்வு செய்யப்பட்டவர் (Recruited direct to a Service)

**(s)** பணி மாறுதல் மூலமாக தேர்வு செய்தல் (Recruited by transfer to a Service)

**(t)** தேர்வு முகமை **(**Recruitment Agency)

# பிரிவு 3 – விளக்கங்கள்-தொடர்ச்சி ....

**u.** காத்திருப்போர் பட்டியல் (Waiting list)

**v.** அட்டவணை (Schedule)

**w.** அட்டவணை பிரிவினர் (Scheduled Castes)

**x.** பழங்குடியினர் (Scheduled Tribes)

**y.** தொகுதி (Service)

**z.** சிறப்பு விதிகள் (Special Rules)

**za.** போர் பணி (War Service)

# பிரிவு 4 அரசுப்பணியாளர்களின் வகைபாடுகள்

## (Classification of Govt. Servant)

| பிரிவு (Group) | ஊதிய நிலை (Pay Level ) | ஊதியம்( Pay ) |
|---|---|---|
| அ (A) | 25 - 32 | ரூ. 59300 - 187700/- முதல்<br>ரூ.128900 - 225000/- |
| ஆ (B) | 13 - 24 | ரூ. 35900 - 113500/- முதல்<br>ரூ. 57700 - 182400/- |
| இ (C) | 02 - 12 | ரூ. 15900 - 50400/- முதல்<br>ரூ. 35600 - 112800/- |
| ஈ (D) | 01 | ரூ.15700 - 50,000/-<br>அவி -9(A) |

**பிரிவு-5 :**

ஊதியம், படிகள், விடுப்பு, விடுப்பூதியம், ஓய்வூதியம் மற்றும் பணியின் இதர நிபந்தனைகள் குறித்து 6 விதிகளில் தெரிவிக்கப்பட்டதே செல்லும். ஆனால் இந்த சட்டத்தில் வெளிப்படையாக தெரிவிக்கப்பட்ட இனங்கள் தவிர. (பிரிவு 68யும் காண்க)

**பிரிவு- 6 :**

பணி, வகை, இனம் மற்றும் தரவரிசை ஒவ்வொன்றின் நிரந்தரப்படி நிலையானது மாநில அரசால் முடிவு செய்யப்பட வேண்டும்.

# பிரிவு 7(1) :
# ஏற்பளிக்கப்பட்ட நபர்கள் மற்றும் ஏற்பளிக்கப்பட்ட பட்டியல்
# (Approved Candidates and List of Approved Candidates )

அட்டவணை-XI-யில் கண்ட தகுதிகளின் அடிப்படையில் ஒப்பளிக்கப்பட் நபர்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் நேரடியாகவும், பதவி உயர்வு மூலமாகவும், மாற்றுப்பணி மூலமும் நியமனம் வழங்க கீழ்க்காணும் எண்ணிக்கையில் தகுதி வாய்ந்த நபர்கள் பரிசீலிக்கப்படல் வேண்டும்.

| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | பரிசீலிக்கப்பட வேண்டிய தகுதி வாய்ந்த நபர்கள் எண்ணிக்கை |
|---|---|
| 1 – 20 | உத்தேச காலியிட மதிப்பீட்டில் 200% |
| 21 – 80 | உத்தேச காலியிட மதிப்பீட்டில் 175% (குறைந்தபட்சம் 40 ) |
| 81 மற்றும் அதற்கும் மேல் | உத்தேச காலியிட மதிப்பீட்டில் 150% (குறைந்தபட்சம் 140 ) |

- ❖ காலியிடங்களின் மதிப்பீட்டு அறிக்கை – தற்காலிக, நிரந்தர பணியிடங்கள், அடுத்த ஆண்டில் எதிர்பார்க்கப்படும் பதவி உயர்வு, பணிஓய்வு, புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடம், விடுப்பு மற்றும் இதர காரணங்களால் எதிர்நோக்கப்படும் காலியிடங்கள் அடிப்படையில் மதிப்பிடப்பட்டு மேற்படி அட்டவணையில் கண்ட அடிப்படையில் தகுதியான நபர்கள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்பளிக்கப்பட்ட பட்டியல் தயாரிக்கப்படும்.
- ❖ தேர்ந்தோர் பட்டியல் இட ஒதுக்கீட்டு விகிதாச்சார அடிப்படையில் தயார் செய்யப்படும.
- ❖ பட்டியல், நியமன அலுவலரின் அலுவலக விளம்பரப்பலகையில் விளம்பரம் செய்யப்படும்.
- ❖ துறைத் தலைமை அலுவலகங்களில் உள்ள காலியிடங்களை நிரப்ப, காலியிடங்களின் இருமடங்கு எண்ணிக்கையிலான தகுதி வாய்ந்த நபர்களுடன், சார்ந்த பகுதி, வகுப்பில் முதுநிலையில் மூத்த மூன்று நபர்கள் சேர்த்து பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- விளக்கம்-1: தகுதி வாய்ந்த அலுவலரால் பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட நாளிலிருந்து, அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் ஓராண்டு காலம் நடைமுறையில் இருக்கும்.
- விளக்கம்-2:தேர்வாணையம் உள்ளீட்டுக்குள் அமைந்த பதவிகளுக்கு தற்காலிக தேர்வு பட்டியல் தயார் செய்தல்
- விளக்கம்-3: தேர்வாணையத்தினை கலந்தாலோசிக்க வேண்டாத பதவிகளுக்கு தற்காலிக பட்டியல் வெளியிடுதலாகாது.

- எந்தவொரு தொகுதி, நிலை அல்லது பதவிக்கு தயார் செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்ட நபர், அத்தொகுதி, நிலை அல்லது பதவியில் நியமனம் பெற உரிமையுடையவர் அல்ல.

பிரிவு7(5)

தேர்வாணையம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட நபர் சாதாரணமாக நியமன ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அல்லது சிறப்பு நேர்வாக நியமன அலுவலர் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக குறிப்பிட்ட நாளுக்குள் பணியில் சேரவில்லையெனில், அப்பதவிக்கான நியமனம் பெற அந்நபர் உரிமையை இழப்பதுடன், தேர்வு பட்டியலிலிருந்து அந்நபரது பெயர் நீக்கம் செய்யப்படும்.

எனினும் சிறப்பு நேர்வுகளில் ஏற்கத்தக்க காரணங்கள் இருப்பின் நியமன அலுவலர் மேற்குறிப்பட்ட கால அளவினை ஆறு மாதங்கள் வரை நீட்டிப்பு செய்யலாம்.

தவிர்க்க இயலாத காரணங்களினால், நபர் ஆறு மாதங்களுக்கு பின்னர் பணியில் சேர அனுமதிக்கப்படுவாரேயாயின், அவரது முதுநிலை அப்பட்டியலில் இளையவருக்கு பின்னர் பணியில் சேர்ந்த நாளிலினை கணக்கில் கொண்டு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

## பிரிவு 8

தேர்வுக்கான விண்ணப்பக் கட்டணம் - தேர்வாணையத்தால் வெளியிடப்படும் அறிவிக்கையில் உள்ளபடி.

## பிரிவு 9 – தேர்வு முறை

மாநில மற்றும் சார்நிலைப் பணி சிறப்பு விதிகளில் தெரிவித்துள்ளவாறு நேரடி மற்றும் பணி மாறுதல் வாயிலாக மேற்கொள்ளப்பட வேண்டிய நேர்வுகளில், நிலையான பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களுக்கு மட்டும் விகிதாச்சார அடிப்படையில் நேரடி நியமனம் மேற்கொள்ளப்படும்.

தற்காலிக பணியிடத்தில் ஏற்படும் காலியிடங்கள் நியமனம், மாற்றுப்பணிநியமனம் மூலம் நிரப்பப்படும்.

- ஐந்தாண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாக உள்ள தற்காலிகப் பணியிடங்கள் இந்த நோக்கத்திற்காக நிரந்தரப் பணியிடங்களாக பாவிக்கப்படும்.

- நேரடி நியமனங்கள் மேற்கொள்ளப்படும் பணியிடங்கள் நீங்கலாக இதரப் பணியிடங்கள் பணி மாறுதல் வாயிலாக நியமனம் மேற்கொள்ளப்படும்.

## பிரிவு - 10 :

நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படாத காலியாக உள்ள பணியிடத்திற்கு தகுதிகாண் பருவம் முடித்தோர் மற்றும் தகுதிகாண் பருவத்தினர் மறு நியமனம் பெறுவதற்கான உரிமை உண்டு. தகுதிகாண் பருவம் துவங்காத நபரைக் கொண்டு அக்காலிப்பணியிடத்தை நிரப்புதலாகாது.

## பிரிவு 11: பணியிலிருந்து விடுவித்தல்/மீண்டும் பணியமர்த்தல்

தகுதிகாண் பருவத்தினர், தகுதிகாண் பருவம் முடித்தோர் மற்றும் முழு உறுப்பினர் ஆகியோர்கள் பணியிலிருந்து இளையோர் முதலில் விலக்கம் செய்யப்படல் வேண்டும்.

❖ மேலும் மீண்டும் பணி நியமனம் மேற்கொள்ளப்படும் நேர்வுகளில், முதுநிலைப் பணி முழு உறுப்பினர், தகுதிகாண் பருவம் முடித்தோர் மற்றும் தகுதிகண் பருவத்தினர் எனும் வகையில் முதுநிலைப்படி பணி நியமனம் மேற்கொள்ளப்படல் ணேடும்.

## பிரிவு-12 பணிக்கு வராத உறுப்பினர்கள்

ஒரு பணியில் இருந்து மற்றொரு பணிக்கு மற்ற வழியில் நியமனம் செய்யப்பட்டு, நியமனம் மேற்கொள்ளப்பட்ட பணியில் ஐந்தாண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்தால், முதல் பணியிலிருந்து முறையாக முதுநிலை அடிப்படையில் பதவி உயர்வு, மாறுதல் மூலம் பணி நியமனம் முழு தகுதியிருப்பினும் மேற்கொள்ள இயலாது. அந்நபர்கள் மீண்டும் முந்தைய பணிக்கு மீள பணியமர்த்தப்பட்டு, ஓராண்டு காலம் புதிதாக பணி மேற்கொள்ளப்பட்டால் அன்றி பதவி உயர்வு, பணி மாறுதல் மூலம் பணி நியமனம் மேற்கொள்ள இயலாது.

**பிரிவு 13** – தகுதிகாண் பருவத்தினர் மற்றும் தகுதி காண் பருவம் முடித்தோர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளில் பணி நியமனத்திற்கான உரிமை:

ஒரு பணியில் உள்ள உறுப்பினர் மற்றொரு பணியில் நியமனம் செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் உள்ள அல்லது தகுதிகாண் பருவம் முடித்தோர், பிற பணியில் நியமனம் பெற அங்கீகரிக்கப்பட்ட நபராக இருந்தாலும் கூட, முந்தைய பணியினை கைவிட்டாலன்றி பணி நியமனம் மேற்கொள்ள இயலாது.

## பிரிவு 14 – முந்தைய பணியில் உரிமை: ( மீள் உரிமை )

ஒரு பணியில் உள்ள நபர் மாநிலத்தில் உள்ள இதரப் பணியில் நேரடியாக பணிநியமனம் பெற, இதர மாநிலம், மத்திய அரசு, பல்கலைக்கழகங்கள் அல்லது இதர அரசு சார்ந்த நிறுவனங்களில் பணி நியமனம் பெற தேர்வு செய்யப்பட்டால், முந்தைய பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு ஆண்டு காலம் மட்டுமே முந்தைய பணியில் பணி உரிமை உண்டு.

எனினும் மேற்படி பணி உரிமை ஓராண்டு காலத்திற்கான ஊதியம், விடுப்பூதியம் மற்றும் ஓய்வூதிய பங்குத்தொகை மேற்படி மாநில அரசின் இதரப் பணி, ஏனைய மாநில அரசு அல்லது மத்திய அரசு, பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், கழகங்கள், பல்கலைக் கழகங்கள் அல்லது அரசு சார்ந்த நிறுவனங்கள் அல்லது சம்பந்தப்பட்ட நபரால் செலுத்தப்பட வேண்டும்.

## பிரிவு 15 – கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கான வயது வரம்பில் விலக்கு:

(ஒருங்கிணைந்த விதிமுறைகள்-அரசாணை எண். 18/2020)

பணியின் போது காலமான அலுவலரது அல்லது மருத்துவ இயலாமையினால் 53 வயதிற்குள் ஓய்வு பெற்ற அரசு ஊழியரின் மகன், மகள் ஆகியோர் 35 வயதிற்குள்ளும், மனைவி, கணவர் 50 வயதிற்குள்ளும் விண்ணப்பிக்க தகுதியுடைவர்கள். குறைந்தபட்ச வயது 18. மேற்படி வயது வரம்பு அரசு அலுவலர் காலமான அல்லது மருத்துவ தகுதியின்மையால் ஓய்வு பெற்ற நாள் கணக்கில் கொள்ளப்படும்.

- மகன் மற்றும் மகள் எனக் குறிப்பிடப்படுவது யாதெனில், அரசு அலுவலர் உயிருடன் இருந்த போது மேற்காள்ளப்பட்ட சட்டப்படியான தத்தெடுக்கப்பட்ட மகன் (11.03.1982 முதல்) அல்லது தத்தெடுக்கப்பட்ட மணமாகாத மகள் (26.10.1983 முதல்), அரசு அலுவலரது குடும்பத்துடன் வசித்து வரும் விதவை மகள், விவாகரத்து செய்யப்பட்ட மகள் (17.06.1991 முதல்) அல்லது கணவனால் கைவிடப்பட்ட மகள் 16.07.1993 (முதல்) ஆகும்.
- அரசு அலுவலரது குடும்பத்துடன் வசித்து வரும் விதவை மகள், விவாகரத்து செய்யப்பட்ட மகள் அல்லது கணவனால் கைவிடப்பட்ட மகள் கருணை அடிப்படையில் பணி நியமனம், காலஞ்சென்ற அரசு அலுவலரது விதவை அல்லது விதவையர் எழுத்துப்பு¦ர்வமாக நியமனம் செய்யப்பட்டால் அன்றி மேற்கொள்ளஇயலாது.

## பிரிவு 16 – சிறந்த சாரணியர்களுக்கு வேலைவாய்ப்பில் சலுகை:

- இச்சட்டத்தில் சொல்லப்பட்ட அல்லது இதர மாநில பணிகளின் சிறப்பு விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்கள் நீங்கலாக, எந்தவொரு பதவிக்குமான நேரடி நியனத்தில் இதர இனங்கள் சரிசமமாக இருப்பின், சிறந்த சாரணியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.
- விளக்கம் : இந்திய குடியரசு தலைவரின் பரிசு பெற்ற சாரணியர் சிறந்த சாரணியர் ஆவார்.

## பிரிவு 17 – தற்காலிக நியமனம் (Temp. Appt)

- உட்பிரிவு (1) - தேர்வாணையத்தின் கட்டுப்பாட்டிற்குள் வராத பணியிடங்களுக்கு பொது நலன் கருதியும், அவசர அவசியத்தை முன்னிட்டு குறிப்பிட்ட பதவி, நிலைக்கு முழு தகுதி பெறப்பட்டிருப்பின், நியமன அலுவலர் தற்காலிக பணி நியமனம் மேற்கொள்ளலாம்.
- தேர்வாணைய கட்டுப்பாட்டிலுள்ள பணியிடங்களுக்கு பொருந்தாது.
- உட்பிரிவு (3) – தற்காலிக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் எக்காரணத்தினைக் கொண்டும் ஓராண்டிற்கு மேல் பணியில் தொடர அனுமதிக்கக் கூடாது.

- உட்பிரிவு (4) - எந்தவொரு அலுவலர் மீது இலஞ்ச புகார் அல்லது தீய நடத்தை தொடர்பாக விசாரணை நிலுவையில் உள்ள போது, குற்ற வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத நேர்வில், தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுக்கம் மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)-இன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்படாத போது மற்றும் தீர்ப்பாயம் முன்பாக குற்றச்சாட்டுகள் தொடர்பாக நடவடிக்கைகள் நிலுவையில் இல்லாத போது அவ்வலுவலரை நியமன அலுவலர் விசாரணை நிலுவையில் உள்ள போது தற்காலிக நியமனம் மேற்கொள்ளலாம்.

## பிரிவு 18 – தேர்வாணையத்தின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத பணியிடங்களுக்கான நியமனம்:

- உட்பிரிவு(1) தேர்வாணையத்தின் கட்டுப்பாட்டிற்குள் இடம் பெறாத பதவிகளுக்கான நியமனம், வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியல் மற்றும் இரண்டு நாளிதழ்களில் அவற்றுள் ஒன்று பிராந்திய மொழியில் விளம்பரம் பிரசுத்து பெறப்படும் விண்ணப்பங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- உட்பிரிவு (2) – மேற்படி நியமனம் நியமன அலுவலரால் அல்லது அவரால் நியமனம் செய்யப்பட்ட அலுவலரால் அல்லது மூன்று நபர்களுக்கு மிகையில்லாமல் நியமன அலுவலரால் அமைக்கப்பட்ட குழுவினால் சம்பந்தப்பட்ட நபர்களிடம் வாய்மொழி நேர்காணல் நடத்தியும், தேவைப்படின் குறைந்த நேரம் கொண்டு, சிறிய அளவில் எழுத்துத் தேர்வு நடத்தியும், தகுதி வாய்ந்த நபர் (கள்) தேர்வு நடைமுறையில் உள்ளவாறு எங்கெல்லாம் இன சுழற்சி அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படல் வேண்டுமோ அவ்வாறே செய்யப்படல் வேண்டும்.

## பிரிவு 19 :– ஒப்பந்த அடிப்படையில் நியமனம்:

## பிரிவு 20 – அரசுப்பணியில் நியமனம் செய்யப்படுவதற்கு அடிப்படைத் தகுதிகள்:

அட்டவணை-III-இல் குறிப்பிட்டுள்ளவாறு குறைந்தபட்ச பொது கல்வித் தகுதி ஆகும். (பள்ளி இறுதி வகுப்பு பொது தேர்வில் தேர்ச்சி ) Schedule-III.pdf

## உட்பிரிவு 2

துறைத் தலைவர் சான்றளிக்கும் பட்சத்தில், குறைந்தபட்ச கல்வித் தகுதி இல்லாத நபர்கள், தேர்வாணையத்தினால் நடத்தப்ப்படும் S.S.L.C. நிலையில் நடத்தப்படும் தேர்வுகளில் கீழ்க்கண்டவாறு மதிப்பெண்கள் பெறப்பட்டால் குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றவராவார்.

| வ. எண் | பாடம் | குறைந்த பட்ச மதிப்பெண் |
|---|---|---|
| 1. | ஆங்கிலம் | 35 |
| 2. | பொது அறிவு | 35 |

## உட்பிரிவு (3)

குறைந்தபட்ச கல்வித் தகுதிக்கான விதி, கீழ்நிலை பதிவியிலிருந்து, உயர்நிலை பதவிக்கு நியமனம் மேற்கொள்ளப்படும் போது எக்காரணம் கொண்டும் விலக்களிக்கப்பட மாட்டாது.

## உட்பிரிவு (4)

(i) தேர்வாணையம் மூலமாக அல்லது நியமன அலுவலரால் நேரடி நியமனம் மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட நபரது நடத்தை மற்றும் முன்வாழ்க்கை அப்பதவிக்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) அந்நபர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியை உடையவராகவோ, பெண் எனில் ஏற்கனவே மனைவியை உடைய நபரை திருமணம் செய்துள்ளவராகவே இருத்தல் கூடாது.( அ.ப.ந.விதி-19)

(iii) காலிப்பணியிடம் அறிவிப்பு வெளியிடப்பட்ட ஆண்டின் ஜூலை மாதம் முதல் நாளில் சிறப்பு விதிகளில் சொல்லப்பட்டவாறு வயது வரம்பினை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) தகுதிகள் - முன் அனுபவம் நிர்ணயிக்கப்பட்டிருந்தால்- பூர்த்தி செய்ய வேண்டும்.

## உட்பிரிவு (5)

உடற்தகுதி பற்றிய சான்று– உடல் ஊனமுற்றவர்களுக்கும் இதர தகுதி/ஊனம் தடையாக இல்லாத நிலையில் தகுதியுண்டு.

## உட்பிரிவு (6)

(a) காலியிடம் அறிவிப்பு வெளியிடப்பட்ட ஆண்டின் ஜூலை மாதம் முதல் நாளில் 18 வயது பூர்த்தியடையாத எவரும் குறிப்பிட்ட பணிக்கு நியமனம் பெற தகுதியுடையவரல்ல.

(b) அரசு அலுவலர் காலமான மூன்றாண்டு காலத்திற்குள் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரி நியமன அலுவலரிடம் விண்ணப்பம் மேற்கொள்ளப்படும் நாளில் 18 ஆண்டுகள் வயது பூர்த்தியாகியிருத்தல் வேண்டும்.

**உட்பிரிவு (7)**

இந்திய குடிமகன் அல்லது குடியுரிமையுடையவர்

**உட்பிரிவு (8)**

சிறப்பு விதிகளில் வரையறுக்கப்பட்ட வயது வரம்பு பொறுந்தா இனங்கள்

பட்டியல் இனம், இதர பிற்பட்டோர், மாற்றுத்திறனாளி, ஆதரவற்ற விதவை, முன்னாள் படைவீரர்

## பிரிவு 21 – மொழிக்கான தகுதி:

தமிழ்நாட்டின் ஆட்சிமொழியான தமிழ் மொழியில் போதுமான தகுதியில்லாமல் இருப்பின் எந்தவொரு பணியிலும் நியமனம் பெற தகுதியுடையவரல்லர்.

09.02.1996-க்கு பின்னர் மேற்படி தமிழ் மொழி தகுதியில்லாமல் இருந்து பணி நியமனம் செய்யப்பட்டவர்கள், தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை மொழித் தேர்வில் இரண்டாண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறுதல் வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறவில்லையெனில் பணியிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.

## பிரிவு: 22

பத்தாம் வகுப்பிற்கு குறைவான கல்வித்தகுதியுடையவர்களுக்கு நியமன அதிகாரியால் 8ம் வகுப்பு தரத்திலும், அதற்கும்கீழ் உள்ளவர்களுக்கு 4ம் வகுப்பு தரத்திலும் இரண்டாம் மொழித்தேர்வு நடத்தப்படும்.

**பிரிவு 23**

சில பட்டங்கள் தொடர்பாக சிறப்பு விதிகள்:

**பிரிவு 24**

தகுதிகாண் பருவம் தொடங்குவதற்கு முன்பே சிறப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருந்தால் மீண்டும் தேர்ச்சி பெற தேவையில்லை.

**பிரிவு 25** சிறப்பு தகுதிகள் பெற தேர்வாணையம் நிர்ணயித்திருக்கும் பட்சத்தில் அதனை பெறாதோர் அந்நியமனத்திற்கு தகுதியற்றவர்.

## பிரிவு 26 - மகளிர் நியமனம்

- ❖ எந்தவொரு நிலையத்திலும், நிறுவனத்திலும் மகளிருக்கென ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட இடங்களில் மகளிரைக் கொண்டே நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ❖ அவ்வாறான இடங்களுக்கு, சரியான மற்றும் தகுதிவாய்ந்த மகளிர் இல்லாத நிலையில் ஆண் நபர்களை நியமனம் மேற்கொள்ளலாம்.
- ❖ அனைத்து நேரடி நியமனமங்களிலும் 30% மகளிர் நியமனம் மேற்கொள்ளப்படல் வேண்டும். இனசுழற்சி உள்ள பணி நியமனங்களுக்கும் மேற்படியான சதவீத அடிப்படையில் மகளிர் நியமனம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- ❖ சுழற்சி முறையிலும் பின்பற்றப்படும்.

❖ எஞ்சியுள்ள 70% இடங்களில் ஆண்களோடு, மகளிர் போட்டியிட தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

❖ ரூ.2,800/-க்கு குறைவான தர ஊதியம் கொண்ட பதவிகளுக்கு நேரடி நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டிய போது, மேற்குறிப்பிடப்பட்ட 30 சதவீதத்தில் 10 சதவீதம், ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். அவ்வாறு தகுதிவாய்ந்த ஆதரவற்ற விதவை இல்லாத போது, அவ்விடங்களுக்கு இதர மகளிரைக் கொண்டு நியமனம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## பிரிவு 27 – பணி நியமனத்தில் இடஒதுக்கீடு:

(a) நியமனத்திற்கான தேர்வு ஒவ்வொரு 200 எண்ணிக்கை கொண்டதாகும். அதன் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| பொதுப்பிரிவு | - 62 (31%) |
| அட்டவணை பிரிவு | - 36 (18%) (SC(A) – 3%) |
| பழங்குடியினர் | - 2 (1%) |
| பிற்படுத்தப்பட்டோர் | - 60 (30%) (BC(M) – 3.5%) |
| மி.பி.ப (ம) சீர்மரபினர் | - 40 (20%)(MBC-13%,DNC-7%) |
| மொத்தம் | - 200 (100%) |

## (b) மாற்றுத்திறனாளிகளுக்கான ஒதுக்கீடு:

மேற்குறிப்பிடப்பட்ட இட ஒதுக்கீட்டில் கீழ்க்கண்டவாறு மாற்றுதிறனாளிகளுக்கு ஒவ்வொரு பிரிவிலும் 1% எனும் வகையில் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**(சட்ட எண் 30/2017-இன் அடிப்படையில்)**

1. கண்பார்வையற்றோர் மற்றும் பார்வை குறைவுடையோர்
2. காதுகேளாதோர் மற்றும் குறை கேட்பு திறனுடையோர்
3. மனவளர்ச்சிகுன்றியோர், குணமடைந்த தொழுநோயாளி, அமில வீச்சால் பாதிக்கப்பட்டோர் உள்ளிட்ட உடல் ஊனமுற்றோர்
4. மூளை வளர்ச்சி குறைவுற்றோர், அறிவுதிறன் குறையுடையோர், மன நோயாளி
5. மேற்காணும் இனங்களில் பல்வகை குறையுடையோர்

மேற்குறிப்பிடப்பட்ட முதல் மூன்று வரிசையில் உள்ளோர்களுக்கு தனித்தனியே ஒரு சதவீதமும், நான்காம் மற்றும் ஐந்தாம் வரிசையில் உள்ளோர்களுக்கு சேர்ந்து ஒரு சதவீதமும், இனசுழற்சியில் ஒவ்வொரு பிரிவிலும் இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**(c)** மேற்படி ஒதுக்கீட்டில் C-பிரிவில் மேற்கொள்ளப்படும் நேரடி நியமனங்களில் **5** சதவீதம் ஒவ்வொரு பிரிவிலும், முன்னாள் இராணுவத்தினர்களுக்கு ஒதுக்கீடு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## பிரிவு 28

தற்காலிக நியமனம் மேற்கொள்ளப்பட்ட நபர் தகுதிகாண் பருவம் துவங்கும் நாள்

## பிரிவு 29

தகுதிகாண் பருவத்திற்காக வெவ்வேறு பணியிலுள்ள பணிக்காலத்தை கணக்கில் எடுத்தல். பல்வேறு பணிகளிலான பணியினை தகுதிகாண் பருவ கணக்கீட்டிற்காக கணக்கில் கொள்ளுதல்

பிரிவு 30

தகுதிகாண் பருவம் கால நீட்டிப்பிற்குட்பாடாதோருக்கு உரிய காலத்தில் காலமுறை ஊதிய உயர்வு வழங்க தடையில்லை.

பிரிவு 31

(1) தகுதிகாண் பருவ காலத்தில் த.நா.கு.ப.விதி.8ன்கீழ் பெருந்தண்டனைகள் வழங்கப்பட முடிவெடுக்கும் நேர்வுகளில் அவருக்கு தகுதிகாண் பருவம் முடிவுறுவதற்கு மேலும் ஒரு வாய்ப்பு வழங்க தேவையில்லை.

(4) தகுதிகாண்பருவ நீட்டிப்பு காலம் அதிகபட்சம் 5 ஆண்டுகள். அதற்குள் தேர்ச்சி பெறவில்லையெனில் பதவியிறக்கம். நேரடி நியமனம் எனில் தகுதிகாண்பருவம் இல்லாநிலை. "அரசு கடிதம்"

பிரிவு 32

தகுதிகாண் பருவத்தினர் முழு உறுப்பினராக தகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தகுதிகாண்பருவம் நிறைவு செய்த தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் விளம்புகை ஆணை பிறப்பிக்க வேண்டும். அவ்வாறு பிறப்பிக்கப்படவில்லையெனில் தகுதிகாண்பருவம் நிறைவு செய்ததாக கருதப்படும். "அரசு கடிதம்"

பிரிவு 33

பிரிவு 31 & 32ன்கீழ் தகுதிகாண்பருவம் முடிக்காதவர்களுக்கு தகுதிகாண்பருவத்தை நீட்டிக்கலாம் அல்லது பணியில் தொடர பொருத்தமானவரா இல்லையா என்பதை முடிவு செய்யலாம்.

## பிரிவு 34

நியமன அலுவலரது சில அதிகாரத்தினை உயர்நிலை அலுவலர் பிரயோகித்தல்

## பிரிவு 35

நியமன அலுவலரது சில அதிகாரத்தினை கீழ்நிலை அலுவலர் பிரயோகித்தல்:

## பிரிவு 36

விடுவித்தலுக்கு எதிராக மேல்முறையீடு -

மேல்முறையீட்டு அலுவலர் மேற்படி விடுவித்தலுக்கெதிராக ஓராண்டு காலத்திற்குள் உரிய ஆணை பிறப்பித்தல் வேண்டும்.

## பிரிவு 37

முழு உறுப்பினராக நியமனம் மேற்கொள்ளுதல்

## பிரிவு 39

சிறப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெறாதவர்கள் ஊதிய உச்ச நிலையில் இருப்பின் அவர்பணிக்குரிய சிறப்பு விதிகளில் உள்ளவாறு ஊதிய இறக்கம் தண்டனையாக வழங்கப்படும்.

## பிரிவு 40 முதுநிலை நிர்ணயம்

இவ்விதி முன்தேதியிட்டு 1.1.1955 முதல் அமலுக்கு வந்தது.

பணிமுதுநிலை என்பது தேர்வாணையம் நிர்ணயித்த முதுநிலை வரிசைப்படி. ஆனால் தகுதிகாண்பருவம் துவங்குவது பணியேற்கும் நாள்முதல்.

## பிரிவு 41 பதவி உயர்வு

நியமனம்பெற்ற பதவியில் தகுதிகாண்பருவம் முடித்திருக்க வேண்டும்.

பிரிவு **42**

மூன்றாண்டு அல்லது நான்காண்டு காலம் தொடர்ச்சியாக விடுப்பில் உள்ளவர்களை உயர்பதவிகளுக்கு நியமனம் பெற கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

உயர் படிப்பு அல்லாமல் பிற காரணங்களுக்காக மூன்றாண்டு காலம் விடுப்பில் உள்ளவர்கள் அல்லது உயர் படிப்பிற்காக நான்காண்டு காலம் விடுப்பில் உள்ளவர்கள், விடுப்பு முடிவுற்ற பின்னர் ஓராண்டு பணி முடித்த பின்னரே பதவி உயர்வு அல்லது பணிமாறுதல் மூலம் பணி நியமனம் பெற கருத்தில் கொள்ளப்படுவார்கள்.

பிரிவு 43:பணி மாறுதல் மூலம் நியமனம்

- சார்நிலைப்பணிகளிலிருந்து மாநிலப்பணியில் செய்யப்படும் நியமனங்கள் தகுதி மற்றும் திறமை அடிப்படையில் மட்டுமே. அவ்விரண்டும் சமம் எனில் பணி மூப்பை கணக்கில்கொள்க.

பிரிவு 44:

எந்தவொரு உறுப்பினருக்கும் அவரது பணி நீட்டிப்பு காலத்தில் பதவி உயர்வு அல்லது பணி மாறுதல் மூலம் பணி நியமனம் வழங்கப்பட கூடாது.

## பிரிவு 45 (அங்கீகரிக்கப்பட்டபட்டியலில் திருத்தம்)

பதவி உயர்வு அல்லது பணி மாறுதல் வாயிலாக பணி நியமனம் மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட நபர்களது பட்டியல் திருத்துதல்:

நியமன அலுவலரது அலுவலக அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்தப்பட்ட பதவி உயர்வு அல்லது பணி மாறுதல் வாயிலாக பணி நியமனம் மேற்கொள்ளுதல் தொடர்பாக பட்டியல், மாநில அரசு (குடிமைப்பணி) பணியெனில் மூன்று மாதங்களுக்குள்ளும், சார்நிலைப் பணியெனில் இரண்டு மாதங்களுக்குள்ளும், தன்னிச்சையாக அல்லது மேல்முறையீட்டின் அடிப்படையில் திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறு மேல்முறையீடு குறிப்பிட்ட காலத்திற்குள் பெறப்படவில்லையெனில், வெளியிடப்பட்ட பட்டியல் இறுதியானதாகும்.

**பிரிவு 46** (பட்டியலினை திருத்தம்/செல்லாததாக்க அரசுக்கு அதிகாரம்)

அரசால் பதவி உயர்வு அல்லது பணி மாறுதல் மூலம் நியமனம் தொடர்பாக வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பட்டியலினை திருத்தம் செய்ய அல்லது செல்லாததாக்க நடவடிக்கை:

துறைத் தலைவர் அல்லது கீழ்நிலை அலுவலர்கள் தயார் செய்த குறிப்பிட்ட பதவி, நிலை அல்லது பணிக்கு நியமனம் அல்லது பதவி உயர்வு தொடர்பாக தயார் செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள அல்லது செல்லாததாக்க அரசுக்கு அதிகாரம் உண்டு.

பிரிவு 47 தற்காலிக பதவி உயர்வு

பொதுநலன்கருதி வழங்கலாம்.

பிரிவு 48 மாறுதல் மற்றும் நியமனம்

அனைத்து மாறுதல்களும், நியமனங்கள் நியமன அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிரிவு 49 தாமாக பணி விலகல் ( இராஜினாமா )

- குறிப்பிட்டபதவியில் செய்யப்பட்ட பணிமட்டுமல்லாது. முந்தைய அரசுப்பணி அனைத்தையும் இழப்பார்.
- தேர்தலில் வேட்பாளராக நிற்க பதவியை துறந்தவர்கள் வேறு எந்தப்பதவியிலும் மறு நியமனம் பெற தகுதியில்லை.

## பிரிவு 50 பணி விலகல் ஏற்பு:

- 3 மாதங்களுக்குள் எழுத்து வடிவில் நியமனஅலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- ஏற்கப்படும் முன் திரும்பப்பெறலாம்.
- 3 மாதங்களுக்குள் ஏற்கவோ நிராகரிக்கவோ வேண்டும்.
- அன்றேல் ஏற்கப்பட்டதாக கருதப்படும்.

## பிரிவு 51

இராணுவப் பணிக்காலம் ஓய்வூதிய கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## பிரிவு 52

பணியிடம் காலியின்மைக்காக முழு உறுப்பினரை பதவியிறக்கம் செய்யலாம்.

## பிரிவு 53

பணியறவு, பணிநீக்கம், கட்டாய ஒய்வு அல்லது பணிநிலை குறைத்த பணியிடங்களை ஓராண்டுகாலத்திற்கு அல்லது மேல்முறையீடு முடியும்வரை நிரப்பலாகாது.

## பிரிவு 54

இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று இதில் அடங்கியுள்ள மாறான கருத்து எதுவும் எவரையும் குந்தகமாக பாதிக்காது.

## பிரிவு 55

ஒய்வூதியதாரர்களை மறு நியமனம் செய்வதென்பது அந்தப்பணியில் முதல் பணியமர்த்தமாக கருதப்படலாகாது.

## பிரிவு 56

மாநில பதவிகளுக்கு அகில இந்திய பணி அலுவலர்கள் நியமனம் -அனைத்திந்திய பணி உறுப்பினராக இருக்க அற்றுப்போகலாகாது.

## பிரிவு 57 : உறுப்பினர் உரிமையை கைவிடல்

(அ) எழுத்து வடிவில். (ஆ) பொதுநலனுக்கு எதிராக இருத்தலாகாது. (இ) பொதுவாக 3 ஆண்டுகள்

## பிரிவு 58

மாநில ஆளுநருக்கு மாநில அரசின் எப்பணியாளர் மீதும், தனது அதிகாரம் செலுத்திடும் உரிமை உள்ளது.

## பிரிவு 59 பிறந்த தேதி மாற்றம்

(அ) 5 ஆண்டுகளுக்குள் நியமனஅலுவலரிடம் விண்ணப்பித்தல் (ஆ) அன்றில் நிராகரிப்பு

## பிரிவு 60

பிறந்த தேதி திருத்தம் - 10ம் வகுப்பு மதிப்பெண்படி

## பிரிவு 61

பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட அல்லது தற்காலிக பணியாளர்களுக்கு மறு நியமனம் பெற முந்தைய பணிக்காலத்தை வயது வரம்பில் சலுகையாக வழங்கலாம்.

## பிரிவு 62

சிறப்பு விதிகளின்கீழ் வராத தற்காலிகப்பதவி நிரந்தரமாக்கப்பட்டால் தற்காலிக விதிகளே(Adhoc Rules) மேற்சொன்ன பதவிகளுக்குப் தொடர்ந்து பொருந்தும்.

பிரிவு 63

முன்னாள் இராணுவத்தினருக்கான சலுகைகள்

பிரிவு 64

மாற்றுத் திறனாளிகளுக்கான வயது வரம்பு குறித்த சலுகைகள்(10 ஆண்டுகள்வரை)

பிரிவு 65

நேரடி நியமனம் தடை காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கான வயது வரம்பு குறித்த சலுகைகள்

பிரிவு 66 மேல்முறையீடு அல்லது மறுஆய்வு

(அ) 2 மாதங்களுக்குள் விண்ணப்பிக்க..

(ஆ) 4 மாதங்களுக்குள் முடிக்க..

பிரிவு 67

மேல்முறையீட்டிற்கான குழு

பிரிவு 68

சிறப்பு விதிகள் இந்த சட்ட விதிகளைவிட மேலோங்கி நிற்கும்.

பிரிவு 69

குறிப்பிட்ட பிரிவுகள் நடைமுறைப்படுத்துதல்

பிரிவு 70

செல்லத்தக்கவைகள்

பிரிவு 71

சிறப்பு விதிகள்

பிரிவு 72

இடர்பாடுகள் களைவதற்கான அதிகாரம்

பிரிவு 73

அரசு அறிவிக்கை வாயிலாக அட்டவணைகளை திருத்த அல்லது மாற்றம் மேற்கொள்ள அல்லது இரத்து செய்யலாம்.

# அட்டவணை-I

பகுதி-A :பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் இஸ்லாமியர்கள், மிகவும்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நீங்கலாக) பட்டியல்
(வரிசை எண்கள்:1 முதல் 139 முடிய)

பகுதி-B :பிற்படுத்தப்பட்டோர்இஸ்லாமியர்கள் பட்டியல்
(வரிசை எண்கள்: 1 முதல் 7 முடிய)

பகுதி-C :மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்
(வரிசை எண்கள்: 1 முதல் 48 முடிய)

பகுதி-D :சீர்மரபினர் பட்டியல்
(வரிசை எண்கள்: 1 முதல் 68 முடிய)

# அட்டவணை – II

## பகுதி A

அட்டவணை பிரிவினர் பட்டியல் (வரிசை எண்கள்: 1 முதல் 76 முடிய)

## பகுதி B

பழங்குடியினர் பட்டியல் (வரிசை எண்கள்: 1 முதல் 36 முடிய)

அட்டவணை-III : குறைந்தபட்ச பொது கல்வித் தகுதி

அட்டவணை-IV : இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வு

அட்டவணை-V : இன சுழற்சி (200 இடங்களுக்கானது)

அட்டவணை-VI : மாற்றுதிறனாளிகளுக்கான ஒதுக்கீடு

அட்டவணை-VII: C பிரிவு பணியிடங்களுக்கான முன்னாள் இராணுத்தினர்களுக்கான ஒதுக்கீடு

அட்டவணை-VIII : அட்டவணை – V இன்படியான இன சுழற்சியில் மகளிர்களுக்கான ஒதுக்கீடு

## அட்டவணை-IX:

நேரடி நியமனம் குறித்து அட்டவணை பட்டியல் மற்றும் பழங்குடியினர்களுக்கு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட பணியிடங்கள் காலிப்பணியிடங்கள் முன்கொணர்தலுக்கான வழிமுறைகள்

## அட்டவணை-X:

ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழின் மாதிரி படிவம்

# அட்டவணை – XI

**பகுதி A:**

அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் தயார் செய்தலுக்கான நடைமுறைகள்

**பகுதி B:**

அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் தயார் செய்யத் தேவையான விவரங்கள் / ஆவணங்கள்

**பகுதி C:** முன்னுரிமை பட்டியல்

**பகுதி D:**

அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் பெயர் சேர்க்க கருதப்படும் உறுப்பினர்களது விரிவான விவரங்கள்

## அட்டவணை-XII :

## வேட்பாளர்கள் அளிக்கப்பட வேண்டிய உறுதிமொழி மற்றும் பணியில் உள்ள இராணுவ வீரர்களுக்கான சான்றிதழின் மாதிரி படிவம்

நிறைவு

நன்றி

வணக்கம்